


பால்நிலை சமத்துவத்திற்கான

# உலகளாவிய வெற்றியாளர்

# ஒரே பார்வையில்

ஐ.நா பெண்கள் அமைப்பு என்பது பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டலுக்கான ஐக்கிய நாடுகளின் அமைப்பாகும். ஒரு பகிரப்பட்ட நோக்கத்தின் பின்னால் மக்கள், பிரச்சினைகள் மற்றும் யோசனைகளை நாங்கள் இணைக்கிறோம்: பால்நிலை சமத்துவத்தை நம் வாழ்நாளில் யதார்த்தமாக்குகிறோம்.

**பால்நிலை சமத்துவம் மீதான சர்வதேச நியமங்கள் மற்றும் அர்ப்பணிப்புகளை வடிவமைத்தல், பாதுகாத்தல் மற்றும் ஊக்குவிப்பதற்கான எமது குறித்தொதுக்கப்பட்ட ஆணையின் ஒரு பகுதியாக, ஐ.நா. பெண்கள் அமைப்பு நிலைத்துநிற்கும் உலகளாவிய செயன்முறையை நோக்கி, இலங்கையில் தேசிய கொள்கைகள் மற்றும் நியமங்களின் உருவாக்கத்திற்கும், இந்த சர்வதேச நியமங்களுக்கெதிராக இலங்கையின் அர்ப்பணிப்புகளை கண்காணித்து அறிக்கையிடுவதற்கும் ஆதரவளிக்கின்றது.**

**ஒவ்வொரு பெண்ணும் பெண்பிள்ளையும் அவர்களது முழுத் திறனுக்கு ஏற்றவாறு வாழ்வதை உறுதி செய்வதற்கும் பெண்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குவதில் நாங்கள் செயற்பாட்டு ஆதரவை வழங்குகின்றோம்.**

## செயற்பாட்டில் ஐ.நா பெண்கள் அமைப்பு: **வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் பெண்களின் சமமான பங்கேற்பு**





# ஆளுகை மற்றும் தீர்மானமெடுத்தல்

1931 இல் நடந்த முதலாவது அரச பாராளுமன்ற தேர்தலிலிருந்து, இலங்கை தேசிய பாராளுமன்றத்தில் ஒருபோதும் 7% இற்கும் அதிகமான பெண்களைக் கொண்டிருக்கவில்லை.

ஆளுகை முறைமையிலிருந்து பெண்கள் தலைமை தாங்குவதையும், பங்கேற்பதையும், சமமாகப் பயனடைவதையும் உறுதிசெய்வதற்காக, தலைமைத்துவம் மற்றும் பங்கேற்பு குறித்த எங்கள் நிகழ்ச்சித் திட்டங்கள், பெண் தலைவர்களுக்கு அவர்களின் இயலளவுகளை கட்டியெழுப்பவும், தீர்மானமெடுக்கும் அனைத்து நிலைகளிலும் பெண்களின் தலைமைத்துவத்தை மேம்படுத்தவும் பயிற்சி அளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. பெண்கள் வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்பதைத் தடுக்கும் பாரபட்சமான சட்டங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, சட்டவாக்க, கொள்கை, வரவுசெலவுத்திட்ட மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்காக நாங்கள் பிரச்சாரம் செய்கின்றோம்.

**ஐ.நா பெண்கள் அமைப்பானது அரசாங்கம் மற்றும் பிற பங்காளர்களுடன் இணைந்து, பால்நிலை அக்கறையுள்ள வரவு செலவுத் திட்டத்தை நிறுவனமயப்படுத்தப்படுத்துவதற்கு, இலங்கையின் தேசிய வரவு செலவுத் திட்டத்தின் முதலாவது விரிவான பால்நிலை பகுப்பாய்வை 2019 ஆம் ஆண்டு மேற்கொண்டது. 16 மாவட்டங்களில் முதன்முறையாக 300க்கும் மேற்பட்ட பெண் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் இயலளவுகளைக் கட்டியெழுப்பியதன் மூலமும், சமூக மனப்பான்மையை மாற்றும் வகையிலும், வலுவான சமூக ஆதரவுடைய தலைமைத்துவத்தை செயற்படுத்தவும் அரசியலிலுள்ள பெண்களுக்கும் மற்றும் அவர்களது தொகுதிகளுக்கும் இடையிலான உரையாடலை வசதிப்படுத்தியதன் மூலமும் உள்ளூராட்சி மட்டத்தில் பெண்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்திற்கான இலங்கையின் முதலாவது ஒதுக்கீட்டைக் கொண்டு வருவதற்கு ஐ.நா பெண்கள் அமைப்பு மேலும் பங்களித்துள்ளது.**



# பொருளாதார வலுவூட்டல்

பெண்கள் பொருளாதாரத்திற்கு மகத்தான பங்களிப்பைச் செய்கின்ற போதிலும், அவர்கள் வறுமை, பாகுபாடு மற்றும் சுரண்டல் ஆகியவற்றால் பாராபட்சமான முறையில் பாதிக்கப்படுகின்றனர். பால்நிலைப் பாகுபாடு என்பது பெரும்பாலும் பெண்கள் பணியிடத்தில் இருந்து விலக்கப்படுவதற்கு அல்லது பாதுகாப்பற்ற, குறைந்த ஊதிய வேலைகளில் இருப்பதற்கும், சிரேஸ்ட பதவிகளில் இருப்பவர்களில் சிறுபான்மையினராக இருப்பதற்கும் வழிவகுக்கின்றது.

பெண்களுக்கு வருமான பாதுகாப்பு, கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார சுயாட்சி ஆகியவற்றை உறுதி செய்வதற்காக, எங்களின் நிகழ்ச்சித் திட்டங்கள் கௌரவமான வேலைகளைப் பெறுவதற்கு, சொத்துக்களை சேர்ப்பதற்கு மற்றும் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை நிர்ணயிக்கும் நிறுவனங்கள் மற்றும் பொதுக் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்துவதற்கு பெண்களின் இயலளவை ஊக்குவிக்கிறது.

**சான்றுகளை அடிப்படையாக கொண்ட கொள்கைகளுக்கான பிரச்சாரத்தில், ஐ.நா பெண்கள் அமைப்பு இலங்கையில் பால்நிலை, இயலாமை மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான முதலாவது அறிக்கையை வெளியிட்டதுடன் இலங்கையின் முறைசார் நிறுவனங்களில் பெண் பணியாளர்களுக்கான ஒப்பீட்டுரீதியான கேள்வி குறித்த முதலாவது ஆய்வை நடாத்தியது. பெண் தொழில்முயற்சியாண்மையின் முயற்சித்து பரிசோதிக்கப்பட்ட புத்தாக்க மாதிரியின் ஊடாக, 6 மாவட்டங்களில் உள்ள பெண் தொழில்முயற்சியாளர்களின் சிறு வணிகங்களை நாங்கள் கூட்டாக ஆதரித்துள்ளதுடன், பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துகின்றோம்.**



# பெண்களுக்கு எதிரான வன்முறையை முடிவுறுத்தல்

பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கெதிரான வன்முறை மனித உரிமை மீறலாகும். ஆயினும்கூட, பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து பாதுகாக்கும் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சவால்கள் உள்ளதுடன், அது பாதுகாப்பு மற்றும் நீதிக்கான அவர்களின் அணுகலைக் கட்டுப்படுத்துகிறது.

பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் அனைத்து விதமான வன்முறைகளிலிருந்தும் விடுபட்ட வாழ்க்கையை வாழ்வதை உறுதி செய்வதற்கு, எங்களின் நிகழ்ச்சித் திட்டங்கள் பெண்களின் பொருளாதார வலுவூட்டல், ஆரம்பக் கல்வி, மரியாதைக்குரிய உறவுமுறைகள் மற்றும் ஆண்கள் மற்றும் இளைஞர்களுடன் பணிபுரிதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதுடன், தடுப்பு என்பது இன்னமும் வன்முறையை நிறுத்துவதற்கு வினைத்திறனான செலவீனமுடைய நீண்ட காலத்திற்கான வழிமுறை என்பதனை அங்கீகரிக்கின்றது.

**பல ஆண்டுகளாக, ஐ.நா பெண்கள் அமைப்பு புலம்பெயர்ந்த பெண் தொழிலாளர்களுக்கான பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கான சேவைகளின் வழங்கல் மீதான தொழிலாளர் இணைப்புகளுக்கான முதலாவது பயிற்சிநெறி கலைத்திட்டம் உள்ளடங்கலாக புலம்பெயர்ந்தவர்களுக்கான உலகளாவிய அரசாங்கங்களுக்கிடையிலான ஒப்பந்தத்தின் (Global Compact for Migration) அமுல்படுத்தலுக்கு ஆதரவு அளித்துள்ளனர்.**



# சமாதானம் மற்றும் பாதுகாப்பு

சமாதான செயன்முறைகளில் பெண்களின் பங்கேற்பு மோதலுக்குப் பின்னர் நீண்ட மற்றும் அதிகளவில் நிலையான சமாதானத்திற்கு பங்களிக்கிறது என்பதற்கான வலுவான சான்றுகள் உள்ளன. ஆயினும்கூட, பெண்கள் பெரும்பாலும் புலனாகாதவர்களாகவும், சமாதான செயன்முறைகள் மற்றும் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் நிலையான சமாதானம் மற்றும் மீண்டெழலைக் கட்டியெழுப்புவதில் அதிக செல்வாக்கை கொண்டிருப்பதையும் பங்களிப்பதையும் உறுதிசெய்வதற்கு, ஐ.நா. பெண்கள் அமைப்பு மோதலைத் தடுத்தல், சமாதானத்தை கட்டியெழுப்பல் மற்றும் நிலைநிறுத்தல் செயன்முறைகளில் பங்கேற்பதற்கு எல்லாவிதமான பின்னணிகள் மற்றும் வயதுகளை உடைய பெண்களை ஆதரிப்பதன் மூலம் சமாதானத்தை மேம்படுத்துவதற்குப் பணியாற்றுகின்றனர்.

**பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான இலங்கையின் முதலாவது தேசிய செயற்திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் பரந்த நோக்கத்துடன், பெண்களின் உரிமைகள் தொடர்பான கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களின் இயலளவைக் கட்டியெழுப்புவதன் மூலம், இலங்கையில் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்துவதில் ஐ.நா பெண்கள் அமைப்பு தலைமையேற்கின்றது.**

**ஐ.நா பெண்கள் அமைப்பு இலங்கையில் பால்நிலை எண்ணக்கரு குழு மற்றும் பிற பொதுவான முயற்சிகளின் ஊடாக பால்நிலை சமத்துவத்தை முன்னேற்றுவதற்கு முயற்சிகளை பரந்த ஐ.நா அமைப்பினுள் ஒருங்கிணைக்கிறது. நாங்கள் பரப்புரை முயற்சிகளை ஒருங்கிணைக்கிறோம், அறிவை உருவாக்குகிறோம், வலையமைப்புகளை கட்டியெழுப்புகிறோம், அத்துடன் இலங்கையில் நிலையான அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையாக பால்நிலை சமத்துவத்தை நிலைநிறுத்துவதற்கும், அதிக உள்ளடங்கலான உலகத்திற்காகவும், அமைப்பு ரீதியான நடவடிக்கைகளையும் முன்னேற்றத்தையும் கண்காணிக்கின்றோம்.**



UN WOMEN

ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு
202-204 பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 07

+94 11 2580691-7
srilanka.office@unwomen.org
srilanka.unwomen.org
@unwomenSriLanka